842

842

# ஸன்மார்க்கப்ரதர்சினீ

Vol. 2. MARCH, 1935 No. 7.




மாதப்பதிப்பு.

பத்ரிகாசிரியர்: சாஸ்த்ர ரத்னம் தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்த்ரியள்.
மதுரை. (S. I.)

தனிப்ரதி விலை அணு 2.

Copy Right.

… OF … REGISTR … AY 1955

உ

# ஸ்ரீமத் ராமாயணம்

**முன்** ஸஞ்சிகையில் சொல்லப்பட்டபடி ஸ்ரீராமபிரான், அர்த்தகாமங்களைக் காட்டிலும், தர்மம்தான் பெரிது என்று உபந்யஸித்த மஹிமையினால் லக்ஷ்மணஸ்வாமியும் ஸ்ரீராமனுக்குத் தாயாரான கௌஸல்யாதேவியும், ஸ்ரீராமனுடைய வனவாஸத்தையே அங்கீகரித்துவிட்டார்கள்.

பிறகு பகவானான ஸ்ரீராமனும், தாயாரான கௌஸல்யாதேவியினால் ஆசீர்வதிக்கப்பட்டவனாய்க்கொண்டு, ஸீதையினுடைய விடையைப் பெற்றுக்கொள்வதற்காக ஸீதாதேவியிருக்கும் அந்தப்புரம் சென்றார். லக்ஷ்மணாழ்வாரும் ராமனுடன் கூடவே இருந்துவருகிறார். ஸீதாதேவியோ, ராமனைக்கண்ட மாத்ரத்திலேயே பரமஸந்தோஷத்துடன் ராமனை வரவேற்று ஆதரித்தாலும், ஏதோ ராமன் கவலை உள்ளவராக இருப்பதுபோல் முகத்தினுடைய ஸந்தோஷக் குறைவிலிருந்தும் தெரிந்துகொண்டு, ரொம்பவும் மனோவருத்தத்துடன் ராமனைப் பார்த்து சொல்கிறாள்,

"ராமா! இன்றைய தினம்தானே புஷ்யநக்ஷத்ரம். தங்களுக்குப் பட்டாபிஷேக முஹூர்த்தம் இன்றல்லவா குலகுருவால் வைக்கப்பட்டிருக்கிறது! அவ்விதமிருக்கும்பொழுது முகத்தில் ஸந்தோஷத்தைக் காணோமே. வெண்குடை எங்கே? சாமரங்கள் எங்கே? ஸூத, மாகத, வந்திகள் என்ற ஸ்தோத்ர பாடகர்கள் ஒருவரையும் காணோமே! ராஜசின்னங்கள் ஒன்றும் இல்லாமல் தாங்கள் தனியாக வருவதைப் பார்த்தால் ஏதோ எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே,"

என்று ரொம்பவும் துக்கத்துடன் ஸீதாதேவியானவள் ராமனிடம் சொன்னாள்.

ஸ்ரீராமபிரானோ, அதைக்கேட்ட மாத்ரத்தாலேயே ரொம்பவும் மனோவருத்தத்துடன், "ஹே ப்ரியே! தசரதசக்ரவர்த்தியான என் பிதாவானவர் கைகேயி தேவிக்கு ஏதோ முன்காலத்தில் இரண்டு வரம் கொடுத்து இருக்கிறாராம். அவ்விரண்டு வரங்களையும், இப்பொழுது வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த இரண்டில் ஒன்று பரதனை தன் பிள்ளைக்கு ராஜ்யாபிஷேகமும், இரண்டாவதாக எனக்குப் பதினான்கு வருஷங்கள் வனவாஸமுமாகப் பிரித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். என்பிதாவான மஹாராஜாவோ 14 வருஷங்கள் அரண்யத்தில் வஸிக்கும்படி என்னை ஆக்ஞாபித்து விட்டார். அந்த விஷயத்தை உன்னிடம் தெரிவித்துவிட்டு அரண்யத்திற்குப் போகப்போகிறேன். அதுவரையிலும் நீ அயோத்தியிலேயே இருந்துவரவேண்டும், பரதன் ராஜ்யத்தை ஆண்டுவருவனாதால் பரதனுடைய பக்ஷத்தில் ஒருவரையும் நீ நிந்தித்துப் பேசாமல், அவர்களுடன் பஹுமான புத்தியுடனும், அவர்களை அநுஸரித்துக்கொண்டும் நீ இருக்கவேண்டும். கிழத்தன்மையை அடைந்த என் பிதாவான தசரதரோ, தாயாரான கௌஸல்யாதேவியோ இவ்விருவர்களும், நான் அரண்யத்திற்குப்போன காரணத்தால் மனோவருத்தத்தை அடையாமல் இருக்கும்படி அவர்களுக்கு ஸமாதானம் செய்துகொண்டு, அவர்களுக்கு பணிவிடையையும் செய்துகொண்டு இருந்துவர வேண்டும்" என்று ஸ்ரீராமனானவர் தான் போகும் அரண்யத்திற்கு ஸீதையை அழைத்துக்கொண்டுபோக இஷ்டம் இல்லாதது போலொத்த தன் அபிப்ராயத்தை விளக்கிக்காட்டி, தான் அரண்யத்திற்கு ப்ரயாணம் ஆவதற்கு ஸீதையினுடைய அநுமதியை எதிர்பார்த்தார்.



ஸீதாதேவியாரோ இதைக்கேட்ட மாத்ரத்தில் நடுநடுங்கி மனம் கலங்கி கொஞ்சம் விச்வாஸத்தால் கோபத்தையும் அடைந்து ஸ்ரீராமனைப் பார்த்துச் சொல்கிறாள். — அதாவது, "ஹே ப்ரபோ! தங்களுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் ஆகி, தங்களை மஹாராஜாவாகப் பார்க்க எனக்கு பாக்யமில்லாமல் போய்விட்டதே என்றதை நினைத்து நான் வருந்தவில்லை. அரண்யம் தாங்கள் போகும்பொழுது, என்னை இங்கேயே வைத்துவிட்டு தாங்கள் மாத்ரம் போவதற்கு யத்னம் செய்கிறீர்களே, அதுதான் என் மனதை ரொம்பவும் கஷ்டப்படுத்துகிறது. பர்த்தாவான புருஷனைவிட்டுப் பிரிந்து இருக்கும் ஸ்த்ரீ நானல்ல.

"ஹே ஆர்யபுத்ர! தாய், தகப்பன், ஸஹோதரர்கள், பிள்ளை, பெண்கள், மற்ற பந்துஜனங்கள், அவரவர்கள், தன் தன் புண்யபாபங்களை அநுபவிப்பார்கள். மற்றொருவனுடைய கர்மபலத்தை மற்றொருவன் அநுபவிக்கமுடியாது. பர்த்தாவினுடைய புண்யபாபத்தை பார்யை ஒருவள் அநுபவிக்கிறாள். பர்த்தாவினுடைய சரீரமும், பார்யையினுடைய சரீரமும், ஒரே சரீரமாக சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பர்த்தாவினுடைய சரீரம் பாதி பாகமாகத்தான் ஆகும். பார்யையினுடைய சரீரம் மற்றொரு பாதிபாகமாக ஆகிறது. இந்த இரண்டு பாதியும் சேர்ந்து ஒரே உடலாக ஆகிறது. பர்த்தாவுக்கும், பார்யைக்கும் ஸம்பந்தம் இவ்விதமாக சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாமிருவர்களும் சேர்ந்துதான் ஒரு தர்மத்தை ஆசரிக்கிறது என்று ஏற்பட்டிருக்கிறபடியால், வனவாஸம் என்ற தர்மத்தை நீ தனியாக எப்படி ஆசரிக்க முடியும்? அப்படியானால், நம்மிருவர்களுக்கும், ஸஹதர்மசாரித்வம் என்பதோ, பர்த்ருபார்யாபாவம் என்பதோ, எவ்விதம் ஸித்திக்கும்? ராமா! நீ

பெரிய வித்வான். நானொன்றும் உனக்குத் தெரியாததை உபதேசம் செய்வதாக நினைக்கக்கூடாது. என்னைப் பரீக்ஷிக்கிறாயோ, பரிஹாஸம் செய்கிறாயோ? அதனுடைய உண்மை எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என்னை விட்டு நீயும் ஒரு தர்மத்தை செய்யமுடியாது. உன்னைவிட்டு நானும் ஒரு தர்மத்தை செய்யமுடியாது. ஆகையால், வனவாஸத்தில் உனக்கு ஏற்பட்ட ஆக்ஞை எனக்கும் ஏற்பட்டதாகத்தான் ஆகும். பர்த்தாவிற்கு ஸமானமான பாக்யத்தோடு கூடினவளாக பார்யை இருக்கும் காரணத்தால், பர்த்தாவோடு கூடத்தான் பார்யையானவள் இருக்கவேண்டும். பர்த்தாவை விட்டு ஒரு நிமிஷம்கூட பார்யை பிரிந்து இருக்கக்கூடாது," என்ற பாதிவ்ரத்ய தர்மத்தை ஸீதாபிராட்டியானவள், தன் அநுஷ்டான மூலமாக ப்ரஸித்தப்படுத்தினாள்.

பார்யையானவள் பர்த்தாவினுடைய ஸந்நிதியில்தான் எப்பொழுதும் இருக்கவேண்டும். ஏனென்றால், "பர்த்ருஸமான பாக்யத்வாத்" என்ற யுக்தியினால் ஸீதாபிராட்டியானவள் ராமனுடன் அரண்யத்திற்குப் போவதில்தான் உத்ஸாஹம் உள்ளவளாக இருந்தாள்.

அத்துடன் ஸீதா தேவியினுடைய மற்றொரு யுக்தியோ, "ஹே ராமா! தகப்பனாரோ, பிள்ளையோ, தாயாரோ, ஸகிஜனங்களோ, தன்னாத்மாதானோ, ஸ்த்ரீகளுக்கு இவ்வுலகிலோ, பரலோகத்திலோ பந்துவல்ல, எல்லா லோகத்திலும் எப்பொழுதும் ஸ்த்ரீகளுக்கு பர்த்தா ஒருவன்தான் பரமகதியாக ஆகுவான். அவ்விதமிருக்கும் பொழுது உன்னைவிட்டு ஒரு க்ஷணகாலமாவது பிரிந்து எவ்விதம் இருப்பேன்? பர்த்தா ஒருவன்தான் ஸ்த்ரீகளுக்கு பரமகதி என்ற காரணத்தாலும், உன்னுடன் நான் தொடர்ந்துதான் வருவேன் நீ அரண்யத்திற்குப் புறப்பட்டு விடும்பக்ஷத்தில் உனக்கு முன்பு நான்



அரண்யத்திலுள்ள முட்களை என் கால்களால் ம்ருதுவாகச் செய்து கொண்டு, உனக்கு மார்க்கத்தைக் காட்டுகிறவளாக நான் வருவேனே தவிர நான் தனியாக இங்கு இருக்கமாட்டேன். உன் கூட நான் துக்க பூயிஷ்டமான அரண்யத்திலும் வஸித்து, பாதிவ்ருத்ய தர்மத்தை ரக்ஷித்துக்கொண்ட காரணத்தால் ஜன்மஸாபல்யத்தை நான் அடைந்துவிடுவேனோ என்ற அஸூயையா, ராமா! என்னிடத்தில் உனக்கு? அல்லது, 'நீ இங்கேயே இரு' என்று நீ சொன்ன வார்த்தையைக் கேட்காததால் என்னிடத்தில் கோபமா? அந்த அஸூயையோ, கோபமோ, அவ்விரண்டையும் விட்டுவிடு.

"ஒருவன் குடித்த மீதியான ஜலம் எப்படி பானத்திற்கு அர்ஹமில்லையோ, அது எப்படி நிஷித்தமானதோ, அவ்விதமே, அஸூயையும், கோபத்தையும், சாஸ்த்ரத்தில் நிஷேதித்திருக்கிறது. அவ்விரண்டையும் விட்டு விட்டு என்னையும் கொஞ்சம்கூட சங்கையில்லாமல் அரண்யத்திற்கு நீ அழைத்துக்கொண்டு போகவேண்டியதுதான். ஒரு ஸ்த்ரீயை தனியாக நாம் எப்படி காட்டுக்கு அழைத்துப்போவது என்றபயம் வேண்டாம். தெய்வம் ஒன்றிருக்கிறது எல்லாம் நன்மையாகவே நடக்கும் உன்னை விட்டுப் பிரிந்து ஜீவித்துக் கொண்டிருக்கும் பாபத்தை நான் ஒன்றும் செய்யவில்லை, புருஷனை விட்டுப்பிரிந்த ஸ்த்ரீகள் ஸுகமாக ஜீவித்துக்கொண்டிருப்பது பாப கர்யாக்களில் பலமல்லவா? அந்தக்கோடியில் என்னை நீ சேர்த்துவிடாதே, உன்னைவிட்டு எனக்கு பெரிய ஸ்வர்க்காதி லோகங்களில் கூட வாஸம் இஷ்டமில்லை. பர்த்தாவினுடைய கால் நிழல்தான் ஸ்த்ரீகளுக்கு மேலானதே தவிர, (அதாவது கணவனுடைய பாதஸேவைதான் பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கு மேலானதே தவிர ப்ரம்மலோகமோ, கைலாஸமோ, இவைகள் ஒன்றும் பெரிதல்ல, நான் என்னுடைய

பால்ய அவஸ்தையில் என் மாதா பிதாக்களால் பர்த்தாவினிடம்
எவ்விதம் இருந்துகொள்ளவேண்டும் என்றதை சிக்ஷிக்கப்பட்டவளாக
ஆகின்றேன். அந்த தர்மம் எனக்குத் தெரியும். இப்பொழுது புதி
தாய் நான் அறிந்துகொள்ளவேண்டியது ஒன்றுமில்லை. ஆகையால்
நான் உன்னுடன் அரண்யத்திற்கு வந்தேதான் தீருவேன், என்று
ஸீதாபிராட்டியானவள் ஸ்ரீ ராமனிடத்தில் தனக்குள்ள பக்தி விசே
ஷத்தை விளக்கிக் காட்டி, அரண்யத்திற்கு ராமனுடன் துயர்ந்து
போவதிலேயே உத்ஸாஹம் உள்ளவளாக இருந்துவந்தாள்.

ஸ்ரீ ராமனே ஸீதையினுடைய நிர்பந்தத்தைப்பார்த்து தான்
கொஞ்சமேனும், ஸீதையை அரண்யத்திற்கு அழைத்துப் போவதில்
ஸம்மதம் இல்லாதவர் போல் தடுத்தே பேசினார். "ஸீதே! அரண்
யத்தில் பஹுவிதமான ம்ருகங்கள் இருக்கும் ராக்ஷஸர்கள் ப்ரபல
ளாக ஸஞ்சரிப்பார்கள். பனி, குளிர்கள் தாங்காது அவ்விதமான
கஷ்டங்களை ஆலோசித்துப்பார்த்து உன்னை அரண்யத்திற்கு
அழைத்துப்போக என் மனம் ஸம்மதிக்கவில்லை. அதனால்தான்
இங்கேயே இருக்கவேண்டுமென்று சொல்கிறேன் நீ துக்கப்பட
கூடாது" என்று சொன்னார்.

அவ்விதம் ராமர் சொல்லியும், ஸீதாபிராட்டியானவள் அரண்
யத்திற்கு ராமனுடன் துயர்ந்து போவதில்தான் ஒரே விம்பா
இருந்து வந்தாள். ராமா! நான் பால்யத்தில் பிதாவினுடைய க்ரஹத்
தில் இருக்கும்பொழுதே ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தில் நிபுணர்களான
அநேக ப்ராம்மணோத்தமர்கள் என் பிதாவினுடைய ஜனகமஹாராஜா
வினுடைய அருகில் வந்துசேர்ந்தார்கள், அவர்களிடம் என் ஜாதகத்
தைக்காட்டி அப்பொழுதே, 'வனவாஸம் எனக்கு ஏற்படும்' என்று
அவர்கள்மூலம் நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். அந்த ப்ராம்ம



ணர்களுடைய வாக்கு எவ்விதம் பொய்யாக ஆகும். என் பிதாவான ஜனகமஹாராஜாவும் உனக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்கும்பொழுதே உன்னுடைய நிழல்மாதிரியாகவே நான் இருப்பேன் என்று சொல்லிக்கொடுக்கவில்லையா? உன் நிழலை நீ விட்டுவிட்டு நீ தனியாக அரண்யம் போகமுடியுமா? அதுபோல்தான் நானொருவள் அவ்விதமிருக்கும்பொழுது என்னைவிட்டு நீ எவ்விதம் அரண்யம் போவாய்? அவ்விதமே என்னை விட்டு நீ அரண்யம் போய்விட்டால், ஸீதையை அயோத்தியில் விட்டுவிட்டு, ராமன் அரண்யம் போய் விட்டார் என்ற விஷயத்தை என் பிதாவான ஜனகமஹாராஜா கேழ்ப் பாரேயானால், அப்பொழுது உன்னை எவ்விதம் நினைப்பார்? 'யாரோ ஒரு ஸ்த்ரீ புருஷ வேஷத்தைப் போட்டுக்கொண்டு, விச்வாமித்ர மஹர்ஷி பின்னோடு வந்து, நமது பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டுபோய்விட்டாள்' என்றல்லவா நினைப்பார்! உன்னைப் புருஷனல்ல, ஸ்த்ரீதான் என்று என் பிதா உன்னை நினைத்தால், அது உனக்கு கௌரவக் குறைச்சலல்லவா?

"ஹே ராமா! ஸௌந்தர்யத்தால் அந்யர்களை மோஹித்துவிடுகிறாயே. இது உனக்கழகாகுமா? என்னுடைய பிதாக்களோ, அக்னிஹோத்ரம் முதலான கர்மாக்களை அநுஷ்டித்துக்கொண்டே சித்தசுத்தி, அதன்மூலம், ஜீவப்ரம்ம ஐக்ய ஞானம், அதன்மூலம் முக்தி முதலான ஸித்திகளை அடைந்தார்கள். என் தகப்பனார் மிகவும் கர்மிஷ்டர். கர்மானுஷ்டானத்திற்கு பத்னி அவச்யமாதலால் ஒரு நிமிஷம்கூட பத்னிகளை விட்டுப்பிரிந்தவர்களல்ல. அவ்விதமான மஹான்கள். என்னை விட்டுவிட்டு நீ காட்டிற்குப்போய்விட்டால், 'ஒரு ஸ்த்ரீயை ரக்ஷிக்கமுடியாமல் அசக்தியால் ராமன் காட்டிற்கு ஓடிவிட்டான் என்று நினைத்து,' உன்னை எவ்விதம் நினைக்கக்கூடும்.

நீயே யோசித்துப்பார், 'நம் மாப்பிள்ளை, வேஷத்தில் தான் புருஷனே தவிர உண்மையில் ஸ்த்ரீ' என்றுதான் நினைப்பார். ஆகையால் அவ்விதம் என்னுடைய தகப்பனருக்கு எண்ணத்தை உண்டாக்கவேண்டாம். என்னையும் காட்டிற்கு பின்னேடு அழைத்துக்கொண்டே போகவேண்டும்." இவ்விதம் ஸீதை பேசுவதால், உண்மையில் மஹாபுருஷனை எந்த மஹாவிஷ்ணுவானவர் தேவர்களும், அஸுரர்களும் பாற்கடலில் அம்ருதமதனம் செய்யும் காலத்தில், மோஹினிரூபமாக அவதாரம் செய்து (அதாவது திவ்யஸ்த்ரீயாக அவதரித்து) பெரிய பெரிய பலவான்களான அஸுரர்களை வ்யாமோஹப்படுத்தினரோ, அந்த மகாவிஷ்ணுவே இந்த ஸ்ரீராமனுக அவதாரம் செய்திருக்கிறர், என்ற விஷயத்தை ஸீதாபிராட்டியானவள் தன்னுடைய வார்த்தையால் தெரியப்படுத்தி,—"அவ்விதமான சக்தியுள்ள உனக்கு, என்னை அரண்யத்திற்கு அழைத்துப்போக எதற்காக பயம்?" என்றதை விளக்கிக் காட்டினள்.

அதனல் 'ஸ்ரீராமன் மஹாவிஷ்ணுவே' என்றது ஸித்தமாகிறது. ஸீதை ஏதோ ராமனை பருஷமாகப்பேசினளோ என்று நினைக்கக் கூடாது. ஸ்ரீமத் ராமாயணமோ, உத்தமமான காவ்யமாக ஆகும். உத்தமமான காவ்யத்தில் வ்யங்க்யமான அர்த்தமே ப்ரதானமாக வர்ணிக்கப்படும், மேலாகத் தோன்றும் அர்த்தத்தில், அக்காவ்யத்திற்குத் தாத்பர்யமே இராது.

"ஆகையால் நீ என்னைக் காட்டிற்கு அழைத்துக்கொண்டுபோக பயப்பட்டால், வேஷத்தில்தான் புருஷனே தவிர, உண்மையில் நீ ஸ்த்ரீதான்'— என்று என் தகப்பனர் நினைப்பார்." என்று ஸீதாப்ராட்டி சொன்னதற்கோ வெளியில் தோன்றுகிற அபிப்ராயத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆனலோ, "ராமா! ஸ்த்ரீயாக மோஹினி



அவதாரம் செய்த காலத்திலேயே நீ ப்ரபலமான வெகு அஸுரர்களை விரட்டி அனேக தேவர்களை ரக்ஷித்து இருக்கிறயே, அவ்விதம் வல்லமையுள்ள உனக்கு, புருஷ சரீரத்தை எடுத்துக்கொண்ட இந்த அவதாரத்தில், ஸ்த்ரீயாக உள்ள என்னை ஒருவனை அரண்யத்திற்கு அழைத்துப்போய் ரக்ஷிப்பதா உனக்கு ச்ரமமாகும்? ஆகையால் என்னை வஞ்சிக்காதே, உன் தத்வம் எனக்குத் தெரியும்"—என்று ஸீதாதேவியானவள் ராம ரஹஸ்யத்தை வெளியிட்டாள்.

> கிம் த்வாமந்யத வைதேஹ:
> பிதா மே மிதிலாதிப: ।
> ராம ஜாமாதரம் ப்ராப்ய
> ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம் ।

| | |
|---|---|
| ராம (ஹே ராம) | = ஸௌந்தர்யத்தால் உலகத்தையே ப்ரமிக்கச்செய்கிற பரம்பொருளே |
| வைதேஹ: (வைதேஹ:) | = விதேஹ வம்சத்தில் பிறந்தவராயும் |
| மிதிலாதிப: (மிதிலாதிப:) | = மிதிலா தேசத்தை நன்ருய் ரக்ஷிக்கிறவராயும் உள்ள |
| மே பிதா (மே பிதா) | = என் தகப்பனர் |
| புருஷ விக்ரஹம் (புருஷ விக்ரஹம்) | = வெளிவேஷத்தால் புருஷனையும் |
| ஸ்த்ரியம் (ஸ்த்ரியம்) | = உண்மையில் உள்ளே ஸ்த்ரீயாயும் உள்ள |
| த்வா (த்வா) | = உன்னை |
| ஜாமாதரம் (ஜாமாதரம்) | = மாப்பிள்ளையாக |
| ப்ராப்ய (ப்ராப்ய) | = அடைந்து |
| அமந்யத கிம் (அமந்யத கிம்) | = இவ்விதம் மோசம் போனேம் என்று எண்ணினரா என்ன, |

இந்த ச்லோகத்திற்கு தத்வார்த்தமோ "ராமஜ" "அமாதரம்" என்று பதத்தைப் பிரித்துக்கொள்ளவேண்டும். "ஹே ராமஜ" ஸகல ப்ராணிகளையும் ரமிக்கச்செய்வதற்காக அவதரித்த ப்ரபுவே. "புருஷ" "விக்ரஹம்" என்றும் பதத்தைப் பிரித்துக்கொள்ளவேண்டும். "ஹே புருஷ" கர்மபூமியை பரிசுத்தம் செய்துவைக்கிறதற்கு உன் திருப்பாதங்களால் க்ரீடிப்பதற்காக அவதரித்த பரம புருஷனே. "அமாதரம்" தாயில்லாத கைகேயி அம்மாளை "ப்ராப்ய" உத்தேசித்து "விக்ரஹம்" கலஹத்தை மிதிலாதிபனை என் தகப்பனார் எண்ணினரா என்ன? இவ்விதம் வருமென்று நினைக்கவே இல்லை. ஆகிலும் என்னை காட்டுக்கு கூட்டிக்கொண்டுதான் போகவேண்டும். இல்லாவிடில் "ராமஜாமாதரம் புருஷவிக்ரஹம்" என்று பதத்தைப் பிரித்துக்கொள்ளவேண்டும். "புருஷவிக்ரஹம்" புருஷாளை பக்தகோடிகளை விசேஷமாக வேண்டியதைக் கொடுத்து அநுக்ரஹிக்கிற பரம்பொருளாயும் உள்ள "ராமஜாமாதரம்" யோகிகளும் ரமிக்கத் தகுந்த ஆநந்தரூபமான மாப்பிள்ளையான "த்வா" உன்னை "ப்ராப்ய" அடைந்து என் தகப்பனார் ஸ்த்ரீ முதலான விஷயங்களை நினைக்கவே இல்லை. எல்லாவற்றையும்வெறுத்துவிட்டு பரமாநந்தபரிதராக விளங்கி வருகிறார். அவ்விதம் பரமானந்தத்தை கொடுக்கும் பரமபுருஷனை நீ என்னை ஏன் வீணாக கஷ்டப்படுத்துகிறாய். நீ போகும் அரண்யத்திற்கு என்னையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

1. ஒரு ஸ்த்ரீயை ரக்ஷிக்க சக்தியில்லாத புருஷன் புருஷனல்ல. இது மேலாக தோன்றும் பொருள்.

2. ஸபத்னீமாதாவான கைகேயி தேவியை முன்னிட்டு இந்த இக்ஷ்வாகுவம்சத்தில் இவ்விதம் கலஹம் ஏற்படும் என்ற விஷயத்தை



ஜனகமஹா ராஜாவானவர் அறியாமல் மோசம்போய்விட்டார். இதுவும் மேலாகத் தோன்றும் பொருளே.

3. பக்தகோடிகளை அவாளுடைய அபீஷ்டத்தைக் கொடுத்து, விசேஷமாக அநுக்ரஹிக்கும் ஸ்வபாவம் உள்ளதாயும், யோகிகளுக்கு பரமானந்தத்தை உண்டுபண்ணுகிறதாயும் ஸச்சிதானந்தரூபமாயும் உள்ள ப்ரம்மத்தையே விச்வாமித்ர மஹர்ஷி மூலமாக ஜனக மஹாராஜாவானவர் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு ஸ்த்ரீ, பணம்; பிள்ளை ராஜ்யம், முதலிய விஷயாதிகளில் வெறுப்பையடைந்து ப்ரமானந்த ஸாகரத்தில் முழுகிக்கொண்டு ஜீவன்முக்தராக ஆனார்.—இது உட்புகுந்து பார்க்கிறவர்களுக்குத் தோன்றும் வ்யங்க்யார்த்தமாகும்.

(தொடரும்.)

ஸன்மார்க்க ப்ரதர்சனீயை
ஆதரியுங்கள்.

**50 POST CARDS**
**PRINTED WITH YOU NAME FREE**
**The Light of Asia.**
**(A Humourous cultural Monthly.**

Annual Subscription Re. 1 only. " It contains much readable matter of the same vairety neither too serious nor too light " regarding view of philosoyhy and religion. Highly spoken of by Many.

5000 வாசகர்களிடம் இலவசமாய் விளம்பரம் செய்ய இதுவே நல்ல சமயம்.

Wanted Agents liberal commisson
*Apply—Manager*
**Light of Asia**
**Teppakulam, Trichy.**

**INTERNAL HAIR DYE.**
**(TONIC.)**

Its 40 days internal Use turns Gray and White Hairs into Black for Life. Besides it Cures Baldness, Wrinkles. Dental troubles, Constipation, Piles, increases memory. Brain Power, Eye Sight, Appetite, Digestion. Purifies Blood, Tones, Nerves, removes lack of retention. Loss of manhood, Moks young Again, It is Elexir of Life in prolonging age. On failure price Refunded.

**Price 40 doses Postage Rs. 11.**
**WHITE LEPROSY or LEUCODERMA.**

Sure and permanent cure guaranteed by my Harmless Fakiri Buti in one day only. If not, Price Refunded.

**Price per Box Rs. 4.**
*Apply at once to:—The Manager:—*
**INDIAN MEDICAL WORKS**
**Purnea 502 E. B. Ry.**

உ

# ஸ்ரீமத் பகவத்கீதை

## முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

கடவல்லீ உபநிஷத்திலுள்ள இரண்டு மந்த்ரங்களால் ஆத்மவஸ்துவானது தேஹத்திற்கு வேறானது என்று பகவான் உபதேசித்ததை அர்ஜுனனும் ஒப்புக்கொண்டு மறுபடியும் அர்ஜுனனே சங்கிப்பதாவது, ஏ, க்ருஷ்ணபரமாத்மாவே, ஆத்மா தேஹத்திற்கு வேறாகவே இருக்கட்டும். ஆகிலும் பீஷ்மர் முதலான மஹான்களுடைய தேஹத்தை முன்னிட்டோ அல்லது ஆத்மாவை முன்னிட்டோ, துக்கப்படுவது ந்யாயமாகாது என்று தாங்கள் சொன்னதை மட்டும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஏனென்றால், ஆத்மாவை முன்னிட்டு துக்கம் என்பது ஸம்பவிக்கலாம். "ஹனனம்" என்ற க்ரியைக்கு கர்த்தாவாகவோ, கர்மாவாகவோ, ஆத்மா ஆகாததினால், ஆத்ம நிமித்தமான சோகத்திற்கே இடமில்லை, என்று தங்களால் உபந்யஸிக்கப்பட்டதையும் நான் நன்றாய் அறிகிறேன். "ஹந்த்ருத்வமோ" "ஹந்தவ்யத்வமோ" ஆத்மாவினிடத்தில் உண்மையாக இல்லையென்று ஏற்பட்டாலும், ஆத்யாஸிகமாக ஏன் ஏற்படக்கூடாது? ஹனனக்ரியாகர்த்ருத்வத்தையோ, ஹனனக்ரியா கர்மத்வத்தையோ ஆத்மாவினிடத்தில் ஆத்யாஸிகமாக எல்லா வாதிகளும் ஒப்புக்கொண்டேதீரவேண்டும். இல்லாதபோனால் கர்மகாண்டத்திற்கே ப்ராமாண்யம் இல்லாமல் போய்விடும். "ப்ராஹ்மணோ ந ஹந்தவ்ய:" (ப்ராம்மணோ நஹந்தவ்ய;) என்றச்ருதியானது ப்ராம்மண ஹனனம் என்ற

கர்மாவை தடுக்கிறதல்லவா, அந்தகர்மாவானது பாபத்திற்கு காரணமானதினலேதான், அதைத்தடுக்கவேண்டும். அந்த பாபமோ அந்த ஹனனக்ரியையில் கர்த்தாவாக ஆகிறவனுக்குத்தானே ஸம்பவிக்கும். தேஹம் ஜடமானதினல் ஹனனக்ரியைக்கு கர்த்தாவாக ஆகாது. ஆத்மாவோ முன் உபன்யஸிக்கப்பட்டபடி ஷட்பாவவிகார ரஹிதமான காரணத்தால் (சுத்தமானதினல்) ஹனனக்ரியைக்கு கர்த்தாவாக ஆகமுடியாது. இவ்விதம் ஹனனக்ரியைக்கு கர்த்தாவாக ஒருவரும் ஆகாமலிருக்கும்போது, அந்த ஹனனம் என்ற க்ரியையானது யாரிடத்தில் அந்த பாபத்தை உண்டுபண்ணும். ஆகையால், அந்த கர்மாவானது பாபஹேதுவான கர்மா என்று ருஜூப்படுத்தமுடியாதபடியால், அந்தப்ராம்மண ஹனனத்தை நிஷேதம் செய்கிற ச்ருதி (வேதவாக்யம்) வீணுக ஆகிவிடும் அல்லவா? அதற்காக தேஹத்திற்கும் ஆத்மாவிற்கும் ஐக்ய அத்யாஸத்தை ஒப்புக்கொண்டு, அதின் மூலம் ஆத்மாவினிட்த்தில் ஆத்யாஸிகமாக ஹனனக்ரியாகர்த்ருத்வத்தையோ, ஹனனக்ரியாகர்மத்வத்தையோ, ஒப்புக்கொண்டால் தான் மேற்சொன்ன ச்ருதிவாக்யமானது ப்ராமாண்யத்தை அடையும்.

இவ்விதம் ச்ருதிவாக்யத்தின் ப்ராமாண்ய நிர்வாஹார்த்தமாக ஆத்மாவினிடத்திலும் ஆரோபிதமாக க்ரியாகர்த்ருத்வத்தையுப், க்ரியாகர்மத்வத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டியதவச்யமாகையால்? அந்த ஸம்பந்தத்தை முன்னிட்டு பீஷ்மர் முதலான மஹநீயர்களைக் கொல்கிற எனக்கோ, அவர்களைக் கொல்லும்படி என்னை தூண்டுகிற உனக்கோ, கல்பாந்தரத்தில்கூட பரிஹாரம் செய்துகொள்ளக்கூடாததான மஹாபாபம் சேர்ந்துவிடுமே என்று நினைத்து, பீஷ்மர் முதலானவர்களுடைய ஆத்மநிமித்தமான சோகமானது எனக்கு ஏற்படு



கிறது. அது ந்யாய்யம்தானே. இவ்விதமிருக்க, யுத்தத்தில் என் மனது எப்படி ப்ரவ்ருத்திக்கும் என்று அர்ஜுனன் பகவானைப் பார்த்து சங்கிக்கிறுன்.

இதற்கு முன்பு பேசும்போதெல்லாம், அர்ஜுனன், ஆத்மாவானது ஒருக்ரியையில் கர்த்தாவாகவோ, கர்மாவாகவோ, ஆகலாமென்று எண்ணிக்கொண்டு பேசினவன், இப்போதோ, கர்த்ருத்வமோ கர்மத்வமோ ஆத்மாவிற்கு உண்மையில் இல்லை. ஆகிலும் ஆரோபிதமாக ஆத்மாவுக்கு கர்த்ருத்வமும் கர்மத்வமும் உண்டு என்று பேசுகிறுன். அதை அறிந்த பகவானுன ஸ்ரீ க்ருஷ்ணனும் வித்வானுடைய விஷயத்தில், ஆத்மாவினிடத்தில் ஆத்யாஸிகமாகக்கூட கர்த்ருத்வமோ, கர்மத்வமோ கிடையாது. அத்யாஸத்திற்குக் காரணமான மூல அக்ஞானமானது ஞானத்தினுல் நாசத்தை அடைந்த பிறகு, அக்ஞானத்தின் கார்யமான அத்யாஸத்திற்கு வித்வான்களுடைய விஷயத்தில் அவகாசமேகிடையாது என்று பகவான் அர்ஜுனனுக்கு ஸமாதானம் சொல்கிறுர். அதாவது,

> വേദാവിനാശിനം നിത്യം യ ഏനമജമവ്യയം ।
> കഥം സ പുരുഷഃ പാർത്ഥ കം ഘാതയതി ഹന്തി കം ॥
>
> (வேதாவிநாசினம் நித்யம், ய ஏனம் அஜம் அவ்யயம் ।
> கதம் ஸபுருஷ: பார்த்த, கம் காதயதி ஹந்திகம் ॥

| | |
|---|---|
| അജം (அஜம்) | = ஜன்மா என்ற முதல் விகாரமும், அதற்குள் அடங்கின இருப்பு என்ற இரண்டாவது விகாரமும் இல்லாதவனையும் |
| നിത്യം (நித்யம்) | = ஏகரூபமாகவும், அதாவது, வ்ருத்தி பரிணமம் என்ற மூன்றுவது, நான்காவது விகாரம் இல்லாதவனுகவும்

| | | |
|---|---|---|
| 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 (அவ்யயம்) | = | குறைவில்லாதவனும், அதாவது, ஐந்தாவதான அபக்ஷயம் என்ற விகாரமற்றவனாகவும் |
| 𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂 (அவிநாசிநம்) | = | நசிக்கும் ஸ்வபாவத்தோடு கூடாதவனாகவும், அதாவது ஆறுவதான மரணம் என்ற விகாரம் அற்றவனுமுள்ள |
| 𑌏𑌨𑌂 (ஏநம்) | = | இந்த ஆத்மாவை |
| 𑌯𑌃 (ய:) | = | எவனொருவன் |
| 𑌵𑍇𑌦 (வேத) | = | அறிகிறானோ |
| 𑌸𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 (ஸ: புருஷ:) | = | அந்த பரிபூர்ணமான வித்வான் (ப்ரம்மநிஷ்டன்) |
| 𑌹, 𑌪𑌾𑌰𑍍𑌥 (ஹ, பார்த்த) | = | ஏ, அர்ஜுனா |
| 𑌕𑌂 (கம்) | = | எவனை |
| 𑌹𑌨𑍍𑌤𑌿 (ஹந்தி) | = | கொல்வான் (ஒருவனையும் கொல்லவே மாட்டான்.) |
| 𑌤𑌥𑌾 (ததா) | = | அப்படியே |
| 𑌕𑌥𑌂 (கதம்) | = | எப்படித்தான் |
| 𑌏𑌵𑌂 (ஏவம்) | = | அதுபோல் |
| 𑌕𑌂 (கம்) | = | எவனை |
| 𑌘𑌾𑌤𑌯𑌤𑌿 (காதயதி) | = | கொல்லும்படியாகத்தான் ஏவுவான் |
| 𑌕𑌥𑌂 𑌘𑌾𑌤𑌯𑌤𑌿 (கதம் காதயதி) | = | எப்படித்தான் ஏவுவான். |

தாத்பர்யம்:—இந்த ச்லோகத்தால், ஆத்மாவினிடத்தில் ஹந்த்ருத்வத்தையோ, காதயித்ருத்வத்தையோ, இல்லை என்று பகவான் விக்ஷேபமூலமாக ப்ரகாசம் செய்வதிலிருந்து, காதயித்ருத்வ ப்ரயுக்த



மான பாவமோ, ஹந்த்ருத்வ ப்ரயுக்தமான பாவமோ ஆத்மாவுக்கு இல்லை என்பது ஸித்தமாகிறது. அதனால்தான் பகவான் முன்ப்ரகரணத்தில்,

"𑌮𑌯𑍈𑌵𑍈𑌤𑍇 𑌨𑌿𑌹𑌤𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 । 𑌮𑌯𑌾𑌹𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌜𑌹𑌿" ॥ (மயைவ ஏதே நிஹதா: பூர்வமேவ, மயாஹதாம்ஸ்த்வம்ஜஹி) என்ற வாக்யத்தால் பகவான் தன்னிடத்திலேயே (மயாநிஹதா:) என்றதினால் ஹந்த்ருத்வத்தையும், (த்வம்ஜஹி) என்றதினால் காதயித்ருத்வத்தையும், ப்ரதர்சனம் செய்திருக்கிறார். கர்த்ருத்வ ப்ரயுக்தமான பாபமோ, காரயித்ருத்வ ப்ரயுக்தமான பாபமோ, புஷ்கரபலாசத்தில், தாமரை இலையில் ஜலத்தைப்போல் ஆத்மாவினிடத்தில் ஸம்பந்தப்படாது என்ற தத்வத்தைத்தான் காரணமாக வைத்துக்கொண்டு பகவான் உபதேசித்திருக்க வேண்டும். ஸ்பஷ்டமாகவே பகவான்,

𑌤𑌤𑍋 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵 । 𑌨𑍈𑌵𑌂 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ (ததோ யுத்தாய யுஜ்யஸ்வ, நைவம் பாபம் அவாப்ஸ்யஸி) என்ற வசனத்தால், அர்ஜுனா, யுத்தம் என்ற உன் ஸ்வதர்மத்தை கைவிடாமல் செய்து வா. அதனால் பாபலேசம்கூட உனக்கு வராது என்றும் சொல்கிறார்.

ஆனால் ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ ஆத்மாவுக்கு இல்லை என்று இந்த ச்லோகத்தால் உபதேசித்திருப்பது ஸ்பஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ, வாஸ்தவம், அவாஸ்தவம் (ஆத்யாஸிகம்) என்று இரண்டுவிதம் உண்டு. அவைகளுக்குள் வாஸ்தவமான ஹந்த்ருத்வ; காதயித்ருத்வாதிகளை ஆத்மாவினிடத்தில் இல்லை என்று பகவான் சொல்கிறாரா அல்லது அவாஸ்தவமான ஹந்த்ருத்வ, காதயித்ருத்வாதிகளை இல்லை என்று சொல்கிறாரா, என்று விசாரிக்கவேண்டும். ஆனால் வாஸ்தவமான ஹந்த்

ருத்வ, காதயித்ருத்வாதிகள் ஆத்மாவினிடத்தில் இல்லை என்று வந்தால், அர்ஜுனனுடைய கக்ஷி வலுத்துவிடும். க்ருஷ்ணா, ஆத்மாவினிடத்தில், வாஸ்தவமான ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ தானே இல்லை என்று உபதேசித்தாய். அதனாலேயே அவாஸ்தவமான ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ, ஆத்மாவினிடத்தில் உண்டு என்றுதான் ஸித்தமாகிறதே. அவ்விதமிருக்கும்பொழுது பீஷ்மாதிகளுடைய ஆத்மாவைப்பற்றி நான் துக்கப்படுவது ந்யாயம் தானே. நான் எப்படி யுத்தம் செய்வது என்று அர்ஜுனன் ஸாஹஸம் செய்ய ஆரம்பித்துவிடுவான்.

அவாஸ்தவமான ஹந்த்ருத்வ, காதயித்ருத்வாதிகளைத்தான் ஆத்மாவினிடத்தில் இந்த ச்லோகம் நிஷேதம் செய்கிறது என்று இருந்தால், பகவானுடைய கக்ஷியே வலுத்துவிடுகிறது. அர்ஜுனா, ஹந்தாவாகவோ, காதயிதாவாகவோ, வாஸ்தவத்திலே ஆத்மா ஆகிறதேயில்லை என்பது நீயே ஒப்புக்கொண்ட ஸித்தாந்தம். இந்த ச்லோகத்தினாலேயோ, ஆத்யாஸிகமாகக்கூட ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ, ஆத்மாவினிடத்தில் கிடையவே கிடையாது என்பது ஸித்தமாகிறது. அவ்விதமிருக்க, ஹந்த்ருத்வ ப்ரயுக்தமாகவோ காதயித்ருத்வ ப்ரயுக்தமாகவோ ஆத்மாவுக்கு பாபம் எப்படி ஸம்பவிக்கும்; அப்படியிருக்க, ஆத்மாவைப்பற்றி எப்படி சோகப்படலாம். ஏன் நீ யுத்தம் செய்யமாட்டேன் என்று சொல்லவேண்டும்? என்று பகவானுடைய ஸித்தாந்தமானது ப்ரகாசமாகிறது. ஆகையால் இந்த ச்லோகத்திலேயோ ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ, ஆத்மாவுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி ஆத்மாவினிடத்தில் நிஷேதிக்கப்படுகிற அந்த இரண்டும் வாஸ்தவமா, அவாஸ்தவமா என்பதை விசாரிக்கும்போது வாஸ்தவமான அந்த இரண்டை இந்த ச்லோகத்தில் நிஷேதிக்கவரவில்லை; அவாஸ்தவமான அந்த இரண்டைத்தான் இந்தச்லோகத்தில் பகவான் நிஷேதிக்கிறார் என்று தெரிகிறது. ஏனென்றால் வாஸ்தவமான ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ, ஆத்மாவினிடத்தில் இல்லையென்பது வித்வான்கள், அவித்வான்கள் இரண்டுபேர்களுக்கும் ஸமானம்தானே. வித்வான்



களுடைய விஷயத்தில் அல்லவா இந்த இரண்டையும் ஆத்மாவினிடத்தில் இல்லையென்று பகவான் நிஷேதம் செய்கிறார். ஆகையால் அவாஸ்தவமான ஹந்த்ருத்வ, காதயித்ருத்வாதிகள்தான் ஆத்மாவினிடத்தில் இல்லை என்று இந்த ச்லோகத்தில் நிஷேதிக்கப்படுகிறது. வித்வானுடைய ஆத்மாவோ, அவித்வானுடைய ஆத்மாவோ, பாரமார்த்திகமாக ஹந்தாவாகவும், காதயிதாவாகவும் ஆகாதுதான். அப்படி அவித்வானுடைய ஆத்மா பாரமார்த்திகமாக ஹந்தாவாகவோ, காதயிதாவாகவோ, ஆகாதபோனாலுங்கூட, ஆத்யாஸிகமாக ஹந்தாவாகவோ, காதயிதாவாகவோ ஆகிறதுபோல்தான் தோன்றும். அப்படியானால்தான் அவனை அவித்வான் என்று சொல்லமுடியும். வித்வானுடைய ஆத்மாவோ, பாரமார்த்திகமாக மட்டும் ஹந்தாவாகவோ, காதயிதாவாகவோ, ஆகிறதில்லை என்பதில்லை; ஆத்யாஸிகமாகவும் கூட வித்வானுடைய ஆத்மா ஹந்தாவாகவோ காதயிதாவாகவோ ஆகிறதில்லை. அவனிடத்திலும் அத்யாஸமிருந்தால், அவனை வித்வான் என்று எப்படி சொல்லமுடியும்? ஆகையால் வித்வானிடத்தில் ஆத்யாஸிகமாகக்கூட ஹந்த்ருத்வமோ, காதயித்ருத்வமோ, கிடையாது.

ஆனால் இந்த ச்லோகத்தால் ஹனனக்ரியா கர்த்ருத்வத்தையும் காரயித்ருத்வத்தையும் மட்டும்தானே ஆத்மாவினிடத்தில், பகவான் நிஷேதம் செய்ததாக ஆகிறது. அதனால் ஹனனக்ரியாஸம்பந்தம் வேண்டுமானால் ஆத்மாவினிடத்தில் வரவேண்டாம். மற்ற புண்ய க்ரியாஸம்பந்தம் ஆத்மாவினிடத்தில் ஏற்படலாமே. ஆகையால் ஆத்மாஸக்ரியன்தான். என்று மீமாம்ஸகர்கள் முன் வரக்கூடும். அது மிகவும் தப்பானது, இந்த ஹனனக்ரியையை ஆத்மாவினிடத்தில் நிஷேதம் செய்ததில், எதைக்காரணமாக பகவான் சொல்லியிருக்கிறார் என்பதை விசாரிக்கவேண்டும்.

“ அவிக்ரிய ப்ரஹ்மாத்மதர்சித்வாத்மக விதத்வமேவ கலு தத்ர நிதாந்தேந பரவேதி உதந்தேந ஸமர்த்தம் உபக்ஷிப்தம் ”

(அவிக்ரிய ப்ரஹ்மாத்ம தர்சித்வாத்மக வித்வத்மேவகலு தத்ர நிதா

நத்வேன யோவேத இத்யநேந பகவதா உபக்ஷிப்தம்.) "அதாவது ஷட்பாவவிகாரமானப்ரம்மமே நான் என்ற ஞானத்தை அடைந்த வனே வித்வானுகஆகுவான். அவனுக்கு ஹனனக்ரியா ஸம்பந்தமில்லை. என்று ஹனனக்ரியையைத் தடுப்பதில் அவனுடைய வைதுஷ்யத் தைக்காரணமாகச் சொன்னுர். அப்பேர்ப்பட்ட வைதுஷ்யம் என் பது எல்லாவிதமான க்ரியையையும் நிஷேதிப்பதில் காரணமாக ஆகாதா? ஒரு கூரையில் பிடித்த நெருப்பு கூரை முழுமையும் எரிக்காது, ஒரு பக்கம்தான் எரிக்கும் என்பது நம்பத்தகுந்ததா? ஆகையால் வித்வான்களுக்கு ஒரு க்ரியையிலும் ஸம்பந்தம் ஏற்ப டாது. நிஷ்க்ரியமான ப்ரம்மஸ்வரூபமே வித்வானுடைய ஆத்மாவா கும். ஆகையால், வாஸ்தவமாகவோ, அவாஸ்தவமாகவோ, யாதொரு விதமான க்ரியையிலும் ஆத்மஸ்வரூபமானது ஸம்பந்தப்படாததிலு லும், பீஷ்மர் முதலானவர்களுடைய ஆத்மாவும், என் ஆத்மாவும், உன் ஆத்மாவும், உண்மையில் ஒன்ருனதிலும், ஆத்ம நிமித்தமாக சோகத்தை அடைவது வீண்தான். வித்வான்களுடைய பரிஹாஸத் திற்குத்தான் நீ இடமாக ஆகிறுய். ஆகையால் ஸகலவிதமான வ்யா குலத்தையும் நீ விட்டுவிட்டு, யத்ருச்சையாய் ப்ராப்தமாயும், ஸ்வர்க் கத்வாரமாயுள்ள, ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து, சித்தசுத்தி திவாரா, அவிக்ரிய ப்ரம்மாத்மதர்சீயாகவும் நீ ஆகி, க்ருதார்த்தனுக ஆனுலல்லவா என்னுடைய ஸ்நேஹிதன் நீ என்பது உண்மையாக ஆகும். ஆகை யால் வீண் வ்யாமோஹம் (மயக்கம்) வேண்டாம். யுத்தத்தையே செய் என்று பகவான் உபதேசித்தார்.

இரண்டாவது அத்யாயம் 21-வது ச்லோகத்தால் வித்வத் த்ருஷ் டியை அனுஸரித்து கர்த்ருத்வாதி ஸம்ஸாரம் ஆரோபிதமாகக்கூட ஆத்மாவுக்கு இல்லை; அவர்களுடைய த்ருஷ்டியை அனுஸரித்து, ப்ராரப்தகர்மாக்கூட அவர்களுக்கு சுத்தமாக இல்லை, என்ற சில ரஹஸ்யமான தத்வங்களும் வெளியாகிறது. ஆகையால் ப்ரம்ம நிஷ் டர்களுடைய மஹிமையே மஹிமை.

(தொடரும்.)

---

௨

# ஸௌந்தர்யலஹரீ

## 9-வது ச்லோகம்.

𑌮𑌹𑍀𑌂 𑌮𑍂𑌲𑌾𑌧𑌾𑌰𑍇 𑌕𑌮𑌪𑌿 𑌮𑌣𑌿𑌪𑍂𑌰𑍇 𑌹𑍁𑌤𑌵𑌹𑌂
𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌹𑍃𑌦𑌿 𑌮𑌰𑍁𑌤𑌂 𑌆𑌕𑌾𑌶𑌂 𑌉𑌪𑌰𑌿।
𑌮𑌨𑍋𑌪𑌿 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌕𑌲𑌮𑌪𑌿 𑌭𑌿𑌤𑍍𑌵𑌾 𑌕𑍁𑌲𑌪𑌥𑌂
𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍇 𑌪𑌦𑍍𑌮𑍇 𑌸𑌹 𑌰𑌹𑌸𑌿 𑌪𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌹𑌰𑌸𑍇॥

(மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசம் உபரி।
மனோபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே.)

| | |
|---|---|
| 𑌹𑍇 𑌭𑌗𑌵𑌤𑌿 (ஹே பகவதி) | = ஏ பரதேவதையே |
| 𑌮𑍂𑌲𑌾𑌧𑌾𑌰𑍇 (மூலாதாரே) | = ஸகலத்திற்கும் ஆதாரசக்ரமானமூலா தாரமென்ற குதஸ்தானத்தில் |
| 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 (ஸ்திதாம்) | = இருக்கிற |
| 𑌮𑌹𑍀𑌂 (மஹீம்) | = ப்ருத்வீ தத்வத்தையும் |
| 𑌮𑌣𑌿𑌪𑍂𑌰𑍇 (மணிபூரே) | = மணிபூரக சக்ரத்தில் |
| 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 (ஸ்திதம்) | = இருக்கிற |
| 𑌕𑌮𑌪𑌿 (கமபி) | = ஜலதத்வத்தையும் |
| 𑌸𑍍𑌵𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 (ஸ்வாதிஷ்டானே) | = ஸ்வாதிஷ்டாந சக்ரத்தில் |

| | | |
|---|---|---|
| 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 (ஸ்திதம்) | = | இருக்கின்ற |
| 𑌹𑍁𑌤𑌵𑌹𑌂 (ஹுதவஹம்) | = | அக்னி தத்வத்தையும் |
| 𑌹𑍃𑌦𑌿 (ஹ்ருதி) | = | ஹ்ருதயாகாசத்திலிருக்கிற அநாஹத சக்ரத்தில் |
| 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 (ஸ்திதம்) | = | இருக்கிற |
| 𑌮𑌰𑍁𑌤𑌂 (மருதம்) | = | வாயு தத்வத்தையும் |
| 𑌉𑌪𑌰𑌿 (உபரி) | = | கீழ்ச்சொன்ன சக்ரங்களுக்கு மேலிருக்கிற விசுத்தி சக்ரத்தில் |
| 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 (ஸ்திதம்) | = | இருக்கிற |
| 𑌆𑌕𑌾𑌶𑌂 (ஆகாசம்) | = | ஆகாச தத்வத்தையும் |
| 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇 (ப்ரூமத்யே) | = | புருவங்களுக்குமத்தியிலுள்ள ஆக்ஞா சக்ரத்தில் |
| 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 (ஸ்திதம்) | = | இருக்கிற |
| 𑌮𑌨𑍋𑌪𑌿 (மநோபி) | = | மனஸ்தத்வத்தையும் |
| 𑌏𑌤𑌤𑍍 (ஏதத்) | = | இந்த |
| 𑌸𑌕𑌲𑌮𑌪𑌿 (ஸகலமபி) | = | ஸமஸ்தமான |
| 𑌕𑍁𑌲𑌪𑌥𑌂 (குலபதம்) | = | ஸுஷும்நா மார்க்கத்தை |
| 𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 (பித்வா) | = | பிளந்துகொண்டு (தாண்டிக்கொண்டு) |
| 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍇 (ஸஹஸ் ராரே) | = | ஆயிரந்தளமுள்ள |
| 𑌪𑌦𑍍𑌮𑍇 (பத்மே) | = | தாமரைமலரில் |
| 𑌪𑌤𑍍𑌯𑌾𑌸𑌹 (பத்யாஸஹ) | = | ஸதாசிவன் என்ற மஹா புருஷனோடு கூட |
| 𑌵𑌿𑌹𑌰𑌸𑍇 (விஹரஸே) | = | ஆநந்தமாக விளங்கிவருகிறாய். |



தாத்பர்யம்:—இந்த பிண்டம் என்ற சரீரத்திற்குள் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை, என்று ஆறு சக்ரங்கள், ஸுஷும்ந நாடிக்குள் விளங்கியிருக்கின்றன. அந்த ஆறு சக்ரங்களையும், ப்ருத்வி, அக்னி, ஜலம், வாயு, ஆகாசம், மனஸ், இந்த தத்வங்களாகவே சாஸ்த்ரங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. மூலாதாரத்தில் ப்ருத்வி தத்வமானது கந்ததன்மாத்ரையாகவும், மணிபூரகத்தில் ஜலதத்வமானது ரஸதன்மாத்ரையாகவும், ஸ்வாதிஷ்டானத்தில் அக்னிதத்வமானது ரூபதன்மாத்ரையாகவும், அநாஹதத்தில் வாயுதத்வமானது ஸ்பர்சதன்மாத்ரையாகவும், விசுத்தி சக்ரத்தில் ஆகாச தத்வமானது சப்ததன்மாத்ரையாகவும் விளங்கி வருகின்றன. புருவங்களுடைய நடுமத்தியிலுள்ள ஆக்ஞா சக்ரத்தால் மனஸ்தத்வமானது விளங்கி வருகிறது. மனஸ்தத்வம் என்ற பதத்தால் சக்ஷுஸ், ச்ரோத்ரம், ரஸனம், க்ராணம், த்வக் என்று ஐந்து ஞானேந்த்ரியங்களும், வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தம், என்று ஐந்து கர்மேந்த்ரியங்களும், அந்தக்கரணமும் ஆக மொத்தம் 11 இந்த்ரிய தத்வங்களை க்ரஹித்துக்கொள்ளவேண்டும்.

ஆறு சக்ரத்திலுள்ள ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம் என்ற ஐந்து தன்மாத்ரைகள், ப்ருத்வி, அப், தேஜஸ், வாயு, ஆகாசம், என்ற ஐந்து பூதங்கள் ஆக மொத்தம் 10 தத்வங்கள்; முன் சொன்ன 11 தத்வங்கள் இந்த 10 தத்வங்கள் எல்லாம் சேர்ந்து 21 தத்வங்கள் ஆகின்றன. 1000 தளமுள்ள தாமரை மலரைப்போல் விளங்கிவரும் ஸஹஸ்ரகமலம், சந்த்ரமண்டலம், த்வாதசாந்தம், என்று சொல்லப்படும். ப்ரம்மாந்த்ரத்தில் மாயாதத்வம், சுத்தவித்யாதத்வம் மஹேச்வரதத்வம், ஸதாசிவதத்வம் என்ற நான்குதத்வங்கள் அடங்கியிருக்கின்றன. ஆக மொத்தம் 25 (21+4) தத்வங்களாகிவிட்டன.

25 வது தத்வமாகிற ஸதாசிவதத்வத்துடன், 26-வது தத்வமாகிய ஸாக்ஷாத் ஜகதீச்வரி சேர்ந்துகொண்டு சுத்தபரப்ரம்மமாக வர்ணிக்கப்படுகிறாள்.

மூலாதாரம் என்ற சக்ரமானது சரீரத்திற்கே ஆதாரபூதமான சக்ரமாகும். எல்லாவற்றிற்கும் பூமிதான் ஆதாரம் என்பது ப்ரஸித்தமானது அந்த ப்ருத்வி தத்வமானது மூலாதார சக்ரத்தில் கந்ததன்மாத்ரை ரூபமாக விளங்கி வருகிறபடியால், மூலாதார சக்ரமானது சரீரத்தினுடைய ஸ்திதிக்கு ஹேது பூதமான சக்ரமாக ஆகிறது. ப்ருத்வி தத்வரூபமான மூலாதார சக்ரமில்லாதபோனால், தேஹமானது ஆகாசத்திலாவது பறந்துபோய்விடும் அல்லது பாதாளத்திலாவது அமுங்கிவிடும். ஆகையால் மூலாதார சக்ரமானது ரொம்பவும் முக்யமானது.

மணிபூரகத்தில் ஜலதத்வமானது ரஸதன்மாத்ரையாக விளங்கி வருகிறது. பரதேவதையானவள் இந்த சக்ரத்திலிருந்துகொண்டு அநேகவிதமான மணிகளால் அந்த ப்ரதேசத்தையே பூர்த்தி செய்து வைக்கிறபடியால், அந்த சக்ரத்திற்கு மணிபூரக சக்ரமென்று ப்ரஸித்தி ஏற்பட்டுவிட்டது. ஸமயாசாரத்தை அவலம்பித்து ஆந்தரமாக பூஜை செய்கிறவர்களுக்கு, மூன்றாவது கமலமாகிற மணிபூரகத்தில் அநேகப்ரகாரமான மணிகளாலிழைக்கப்பட்ட ஆபரணங்களை தேவிக்கு அலங்காரம் செய்து ஆந்தரமாக ஆநந்தத்தை அடைகிறார்கள் என்பது ஸ்ரீவித்யாதந்த்ரத்தில் ஒரு பெரிய ரஹஸ்யமாகும்.

அவ்விதமே ஸ்வாதிஷ்டான சக்ரதில் அக்னிதத்வமானது ரூபதன்மாத்ரையாக விளங்கிவருகிறது. ஸ்வாதிஷ்டானம் என்ற பதத்தினுடைய அர்த்தத்தையோ அறியவும். பராம்பிகையானவள் குண்டலிநீ சக்தி ரூபமாக தானே அந்த ஸ்தானத்தை ஆக்ரமித்துக்



கொண்டு க்ரந்திகளையும் (முடிச்சு) போட்டுவிட்டு இருப்பது ஸ்வாதிஷ்டானமாகும். ஸ்வாதிஷ்டானத்தினுடைய மேல்பாகத்தின் கடைசியில் ருத்ரக்ரந்தி என்ற ஒரு ஸ்தானம் இருக்கிறது. அதாவது, குண்டலிநீ சக்திரூபமான தேவியை உபாஸிக்கிற ரிஷி ருத்ரனே. அவர் இருக்கும் ஸ்தானத்திற்கு ருத்ரக்ரந்தி என்று பெயர்.

அநாஹத சக்ரத்தில் ஸ்பர்சதன்மாத்ரை ரூபமாக வாயுதத்வம் விளங்கிவருகிறது. அந்த ஸ்தானத்தில் க்ரமமாக சக்ரங்களை தாண்டிக்கொண்டுபோன ஸாதகனுக்கு தேவியினுடைய ஸாக்ஷாத்காரம் ஏற்படும் என்பதற்கு அறிகுறியாக, முன்பு ஒரு சப்தம் அதிரமணியமாக ஏற்படுகிறது. அதற்கு நாதம் என்று ஸ்ரீவித்யாதந்த்ரத்தில் சொல்லப்படும். அந்த நாதம் ஒரு பேரீவாத்யத்தை ஒரு தண்டத்தால் அடித்து ஏற்படுவதுபோலாவது, அல்லது ஒரு பெரிய மணியை அடித்து ஏற்படுவதுபோலாவது, பெரிய வீணை, பிடில் முதலான வாத்யங்களை வாசித்து ஏற்படுவதுபோலாவது உள்ள சப்தத்தைப் போலில்லாமல் அபூர்வமான சப்தமாயிருப்பதினால், அநாஹதஸ்தானமென்று அதற்குப் பெயர் ஏற்பட்டுவிட்டது.

அதற்குமேல் விசுத்தி சக்ரம் என்று சொல்லப்படும். அது சுத்தஸ்படிகத்திற்கு ஸமானமாக இருந்துவருகிறது. அதில் சப்ததன்மாத்ரை ரூபமாக ஆகாசதத்வம் விளங்கி வருகிறது. இதனுடைய அக்ரஸீமாவில்தான் (மேல் பாகத்தின் கடைசியில்) விஷ்ணுக்ரந்தியானது இருந்துவருகிறது. அதாவது விசுத்தி சக்ரத்தில் நாதப்ரம்மரூபிணியான பராம்பிகையை உபாஸிப்பதில் ரிஷியானவர் விஷ்ணுவே. அவர் இருந்துவரும் ஸ்தானம் விஷ்ணுக்ரந்தியாகும்.

பிறகு இரண்டு புருவங்களுடைய நடுமத்தியில் ஆக்ஞாசக்ரம் என்று ஒரு விசேஷஸ்தானம் இருந்துவருகிறது. [illegible], [illegible] (ஆங் ஈஷத்) என்ற ஸூத்ரத்தை அவலம்பித்து, ஜ்ஞா, ஜ்ஞாநே (ஜ்ஞா ஜ்ஞாநே) என்றதையும் முன்னிட்டு, மின்னலைப்போல் தேவியினுடைய ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் உபாஸகர்களுக்கு அந்த சக்ரத்தில் க்ஷணகாலம் ஏற்படுகிறபடியால், ஆக்ஞாசக்ரம் என்று அந்த ஸ்தானத்திற்கு பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்த சக்ரத்தின் மேல்பாகத்தில் ப்ரம்மக்ரந்தியானது இருந்துவருகிறது.

அதற்கு மேலாகத்தான், ஸஹஸ்ரகமலம், சந்தரமண்டலம், த்வாதசாந்தம், ப்ரம்மரந்த்ரம், என்று அநேகவிதமாகச் சொல்லப்பட்ட மஹாசக்ரத்தில் 25-வது தத்வமாகிற ஸதாசிவதத்வத்தோடு, 26-வது தத்வமாகிய சக்தி தத்வமானது ஒன்றாகச்சேர்ந்து "ஸாதா" (ஸாதா) என்ற பெயரையும் அடைந்து, விளங்கிவருகிறது. ஸமய மதத்தை அவலம்பித்து, ஆந்தரபூஜை செய்கிறவர்களுக்கு, இந்த ரஹஸ்யங்களை தெரிந்துகொள்ளவேண்டியது ரொம்பவும் அவச்யமானது. இவ்விதம் அந்தந்த சக்ரத்தினுடைய ஸ்வரூபத்தையும், அந்தந்த சக்ரத்திலுள்ள தத்வத்தையும் தேவதையையும் அறிந்து உபாஸிக்கிற ஸாதகர்களுக்கு, ஸர்வாபீஷ்டமும், அணிமாத்யஷ்டைச்வர்ய ஸித்தியும், பகவதியினுடைய ஸ்வரூப ஸாக்ஷாத்காரமும் க்ரமமாக ஏற்பட்டு உபாஸகர்கள் ஸபலமான ஜன்மாவோடுகூடினவர்களாக ஆகுவார்கள்.

(தொடரும்.)

---

உ

# ஸ்ரீமத் பாகவதம்

## ச்ருதி கீதை—தொடர்ச்சி.

முன் ச்லோகங்களால் ஸர்வாத்மகனான பரமேச்வரனிடத்தில் ஸகலச்ருதிகளுக்கும் ஸமன்வயத்தைத்ருடம் செய்து, அக்காரணத்தினால் ஸுக்ருதிக்குகளுக்கு ச்ரத்தா பக்தியுடன், பஜநீயமான வஸ்துவே வாஸுதேவப்ரம்மமாகும், என்று சொல்லப்பட்டது. அந்த வாஸுதேவப்ரம்மத்தினுடைய பஜனம் பரமோத்க்ருஷ்டமானது என்பதை ஸூசிப்பிக்க, அபக்தாளுடைய நிந்தனையும் விவரிக்கப்பட்டது. இவ்விதமான மஹிமையோடு கூடினது அந்த பரப்ரம்மம் என்பதை ஸுலபமாக கண்டுபிடிப்பது அறிதானதாலும், ஒருவிதமான ஆலம்பனமில்லாமல் அந்த ப்ரம்மத்தை உபாஸிப்பது அதிக கஷ்டமானதினாலும், உபாதியாகிய ஆலம்பனத்தை ஆச்ரயித்து ஏற்பட்ட, உபாஸனப்ரகாரங்களையும், அந்த உபாஸனத்தின் பலனாகிய க்ரம முக்தியையும், சிலச்ருதிகள் போதிக்கின்றன. அதாவது:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(உதா முபஸதேயே ரிஷிவர்த்மஸு கூர்ப்பத்ருச:
பரிஸாபத்ததிம் ஹ்ருதயமாருணயோ தஹரம்।

தத உதகாதநந்த தவதாமசிர: பரமம்
புநரிஹ யத்ஸமேத்ய நபதந்தி க்ருதாந்த முகே ॥ )

𑌋𑌷𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌸𑍁 (ரிஷிவர்த்மஸு) = மஹர்ஷிகளுடைய ஸம்ப்ரதாய மார்க்கங்களில்

𑌯𑍇 (யே) = எவர்கள்

𑌕𑍂𑌰𑍍𑌪𑌦𑍃𑌶𑌃 (கூர்ப்பத்ருச:) = ஸ்தூல த்ருஷ்டிகளோ (ஸூக்ஷ்மமான தத்வத்தை அறிய சக்தியற்றவர்களோ)

𑌤𑍇 (தே) = அவர்கள்

𑌉𑌦𑌰𑌂 (உதரம்) = உதரத்தை அவலம்பித்த அதாவது உதரத்தில் மணிபூரக சக்ரத்திலுள்ள ப்ரம்மத்தை

𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 (உபாஸதே) = த்யானஞ்செய்கிறார்கள்

𑌆𑌰𑍁𑌣𑌯𑌸𑍍𑌤𑍁 (ஆருணயஸ்து) = அருணகோத்ரத்தில் பிறந்த மஹர்ஷிகளோ அதாவது ஸூக்ஷ்மமான தத்வத்தை அறியும் சக்தியுள்ள மஹர்ஷிகளோ

𑌪𑌰𑌿𑌸𑌰 𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌂 (பரிஸர பத்ததிம்) = 72000 நாடிகளும் ப்ரஸரிக்கும் (உத்பத்தியாகும்) ஸ்தானமான

𑌹𑍃𑌦𑌯𑌂 (ஹ்ருதயம்) = ஹ்ருதயகமலத்திலுள்ள

𑌦𑌹𑌰𑌂 (தஹரம்) = தஹராகாச சப்தத்தால் சொல்லப்படுகிற ப்ரம்மத்தையே

𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 (உபாஸதே) = த்யானம் செய்கிறார்கள் (அதாவது அஹங்க்ரஹத்தோடு உபாஸிக்கிறார்கள்).



𑌯𑌤𑍍 (யத்) = எந்த ஸுஷும்ந மார்க்கத்தை

𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 (ஸமேத்ய) = உபாஸகர்கள் அடைந்து

𑌪𑍁𑌨𑌃 (புந:) = மறுபடியும்

𑌇𑌹 (இஹ) = இந்த

𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌮𑍁𑌖𑍇 (க்ருதாந்த முகே) = ம்ருத்யு பயத்தையே முக்யமானதாய் உடைத்தான ஸம்ஸாரபந்தத்தில்

𑌨𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 (நபதந்தி) = விழுகிறார்களில்லையோ

𑌭𑍋, 𑌅𑌨𑌨𑍍𑌤 (போ அநந்த) = ஏ, த்ரிவித பரிச்சேதமற்ற வாஸுதேவ பரப்ரம்மமே

𑌤𑌤𑍍 (தத்) = அப்பேர்ப்பட்ட

𑌤𑌵 (தவ) = உன்னுடைய

𑌧𑌾𑌮 (தாம) = உபலப்தி ஸ்தானமாகிய ஸுஷும்ந நாடியானது

𑌤𑌤𑌃 (தத:) = ஹ்ருதயத்திலிருந்து

𑌪𑌰𑌮𑌂 (பரமம்) = ச்ரேஷ்டமான (அதாவது) ஜ்யோதிர்மயமான

𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿 (சிர: ப்ரதி) = ப்ரம்மரந்தரத்தைக் குறித்து)

𑌉𑌦𑌗𑌾𑌤𑍍 (உதகாத்) = மேலே நோக்கி செல்கிறது.

தாத்பர்யம்:—"𑌉𑌦𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌶𑌾𑌰𑍍𑌕𑌰𑌾𑌕𑍍𑌷𑌾𑌃 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑌾𑌰𑍁𑌣𑌯𑌃" (உதரம் ப்ரஹ்மேதி சார்கராக்ஷா: உபாஸதே ஹ்ருதயம் ப்ரஹ்மேத்யாருணய:) என்றது முதலான உபநிஷத்துக்கள் பரப்ரம்மத்தை ஸ்தோத்ரம் செய்கின்றன. ச்ருதியிலுள்ள சார்க்கராக்ஷா: என்ற பதத்திற்கு கூர்ப்பத்ருச: என்ற பதம் ப்ரதிபதமாகும்: கூர்ப்பம் என்ற பதத்தினால் மணல் என்று அர்த்

தம். அதை த்ருஷ்டியில் உடைத்தானவர்களுக்கு கூர்ப்பத்ருச: என்று பெயர். அவர்களுக்கு எவ்விதம் ஸூக்ஷ்மமான தத்வத்தை அறியும் படியான சக்தி ஏற்படும்? ஸ்தூலமான ப்ரம்மத்தை உபாஸிக்கிறதே அவர்களுக்கு ரொம்பவும் கஷ்டமானது. அதனால்தான் அவர்கள் உதரத்தில் மணிபூரக சக்ரத்தை அவலம்பித்து அதில் ப்ரம்ம தத்வத்தை உபாஸிக்கிறார்கள். ஹ்ருதயத்தை அபேக்ஷித்து உதரம் ஸ்தூலமானதினால் அதில் ப்ரம்மத்தை உபாஸிக்கிறவர்கள் ஸ்தூல உபாஸகர்களாகுவார்கள். இல்லாதபக்ஷத்தில் கூர்ப்பத்ருச: என்ற பதத்திற்கு வேறு அர்த்தமும் உண்டு.

அதாவது கூர்ப்பம் என்றால் ஸூக்ஷ்மம் என்றே அர்த்தத்தை அறியவும். அப்போது ஹ்ருதயகமலத்திலுள்ள தஹராகாசம் என்று சொல்லப்பட்ட ஸூக்ஷ்மமான ப்ரம்மத்தில் த்ருஷ்டியை வைத்துக் கொண்டு உதரமான மணிபூரகத்தில் ஸ்தூலமான ப்ரம்மத்தை உபாஸிக்கிறவர்கள். அதாவது ஹ்ருதயகமலத்திலுள்ள ஸூக்ஷ்மமான ப்ரம்மத்தை அடைவதற்காகவே மணிபூரகத்தில் ஸ்தூலமான ப்ரம்மத்தை உபாஸிக்கிறார்கள். இதனால் கூர்ப்பத்ருச: என்ற பதத்திற்கு ஸ்தூலப்ரம்மோபாஸகாள் என்றோ, ஸூக்ஷ்ம ப்ரம்மத்தை உபாஸிப்பதற்காக ஸ்தூலப்ரம்மத்தை அவலம்பித்தவர்களென்றோ அர்த்தத்தை அறிந்துகொள்ளவும்.

அருணகோத்ரத்திலுண்டான மஹர்ஷிகளோ, ஸாக்ஷாத்தாகவே ஹ்ருதய கமலத்திலுள்ள தஹரவித்யையை கைபிடித்தவர்கள் ஹ்ருதயம் என்ற ஸ்தானத்தில் பரமேச்வரனுக்கு வெகுப்ரியம் என்று ஸகல சாஸ்த்ரங்களும் முறையிடுகின்றன. அநேகப்ரகாரமான ஸூக்ஷ்மமான நாடிகள் அங்கிருந்து உண்டாகின்றன, அதனாலேயே அந்த ஹ்ருதயத்திற்கு ரொம்பவும் உத்கர்ஷம் ஏற்பட்டிருக்கிறது.



நாடிகளுக்குள் ஸூஷும்னை என்ற நாடி ரொம்பவும் மஹிமைதங்கிய நாடியாகும். அந்த நாடிகூட ஹ்ருதய கமலத்திலிருந்துதான் கிளம்பி வளைந்து மூலாதாரம் வரை போய் அங்கிருந்தும் வளைவாக கிளம்பி, மேல் நோக்கிச்சென்று, ஹ்ருதய ஸூஷிரவழியாகப் போய் ஸஹஸ்ர கமலம் என்ற ப்ரம்மரந்த்ரம் வரை சென்று ஸூர்ய ரச்மியோடு ஸம்பந்தப்படுகிறது. அந்த நாடிவழியாக எந்த ஜீவன் இச்சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புகிறானோ அவன் தேவயானமார்க்க வழியாக ப்ரம்மலோகம் சென்று க்ரமமாக முக்தியையும் அடைகிறான். திரும்பி ஸம்ஸாரத்தில் அவன் வருகிறதே இல்லை, இந்த வாஸுதேவ பரப்ரம்மத்தின் ஸாக்ஷாத்காரத்திற்கும் இந்த நாடியே முக்யமான உபாயமாகும். இந்த நாடியினுடைய ஸூஷிரத்தில் ப்ரம்மமானது ஸஞ்சரிக்கும் ஸ்வபாவமுள்ளது. அதாவது இந்த நாடியில்தான் ப்ரம்மத்திற்கு உபலப்தி ஏற்படும்.

இந்த நாடியின் மஹிமையை ச்ருதியானது பலவாராக வர்ணிக்கிறது. அதாவது,

> 𑌶𑌤𑌂 𑌚𑍈𑌕𑌾 𑌚 𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃
> 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌮𑌭𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑍈𑌕𑌾 ।
> 𑌤𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑌾𑌯𑌨𑍍𑌨𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿
> 𑌵𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌙𑌨𑍍𑌯𑌾 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌣𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

என்ற ச்ருதியானது முக்யமாக ஸூஷும்னா நாடியின் பெருமையைச் சொல்வதற்கே ப்ரவிர்த்தித்தது. அதிஸூக்ஷ்மமாக, அநேக ஆயிரக் கணக்கான நாடிகள் சரீரத்திலிருந்து வருகின்றன. அவைகளெல்லாம் ஹ்ருதய கமலத்திலிருந்துதான் உத்பத்தியாகின்றன. அதில் 101 நாடிகள் முக்யமான நாடிகளாகும். அதில் ஒன்று ப்ரம்ம தபா

லத்தை வ்யாபித்துச் செல்கிறது. அந்த நாடிவழியாக சரீரத்தை விட்டு வெளியில் போகும் ஜீவனே, மோக்ஷத்தைத்தான் அடைவான். மற்ற நாடிகள் வழியாக வெளிக்கிளம்பும் ஜீவர்கள் அடிக்கடி ஸம்ஸாரத்தில் திரும்ப பிறந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பார்கள். என்று மேல் சொன்ன ச்ருதியின் தாத்பர்யமாகும்.

இவ்விதம் ஸூஷும்ன நாடியினுடைய மஹிமையை அறியவும். அந்த நாடிகூட ஹ்ருதயத்திலிருந்தே கிளம்புகிறது. பரப்ரம்மத்தினுடைய உபலப்திக்கு முக்ய உபாயமான ஸூஷும்ன நாடிக்கு ஹ்ருதய கமலம்தான் உத்பத்திஸ்தானம் என்பதைக்கொண்டு, அந்த ஹ்ருதய கமலத்தில் பரப்ரம்மத்தை யார் உபாஸிக்கிறார்களோ, அவர்களிடத்தில் பரப்ரம்மத்திற்கு அதி ப்ரேமை உண்டாகிறது. அந்த ஹ்ருதய கமலத்தில் பரப்ரம்மத்திற்கு தஹராகாசமென்று நாமாவை ச்ருதி கல்பித்திருக்கிறது. அந்த தஹராகாசசப்த சப்திதமான பரப்ரம்ம உபாஸகர்களைத்தான், உபாஸகர்களுக்குள் ச்ரேஷ்டர்களென்று ச்ருதியும் வர்ணிக்கிறது. ஸர்வக்ஞனை வ்யாஸாச்சார்யாளும் தஹராதிகரணத்தில் இந்த உபாஸனத்தினுடைய மேன்மையை ரொம்பவும் விஸ்தாரமாக வர்ணித்திருக்கிறார்கள்.

ஆகையால் ரொம்பவும் அறிதான மானிட ஜன்மாவை அடைந்தவர்கள் ப்ரம்மபுரம் என்ற இந்த சரீரத்தில் தஹரமான ஹ்ருதய புண்டரீகத்தில், தஹராகாசம் என்ற ப்ரம்மத்தை உபாஸித்து தனது ஜன்மாவை ஸபலமாகச் செய்துகொள்ளவேண்டியது அவச்யமாக ஆகும். அந்த தஹராகாசத்தில் ஸகலமான காமங்களும் அந்தர்க்கதமாக இருந்துவருகின்றன. காமங்களென்றால், ஸ்த்ரீ முதலான விஷயங்களேயாகும். அந்த விஷயங்கள் ஸத்யமான விஷயங்கள், அந்ருத



மான விஷயங்கள் என்று இருவகைப்படும். வெளியில் அனுபவிக்கப்படும் விஷயங்களெல்லாம் அந்ருதமான விஷயங்களாகும். தஹராகாசத்திலுள்ள விஷயங்கள் ஸத்யமான விஷயங்களாகும். உபாஸகனுடைய ஸங்கல்பமாத்ரத்தில் அந்தந்த விஷயங்களெல்லாம் அவனுடைய அனுபவத்திற்கு யோக்யமாக ஆகின்றன.

“ஸங்கல்பாதேவ து தச்ச்ருதே:” (ஸம்கல்பாதேவ து தச்ச்ருதே:) என்ற ஸூத்ரத்தால் வ்யாஸாசார்யாளும் இந்த விஷயத்தை விவரித்திருக்கிறார்கள். ஆகையால் ப்ரம்ம உபாஸனத்திற்கு ஸமானமாக மானிட ஜன்மாவில் அடையவேண்டிய பயன் வேறொன்றுமில்லை. ஸூக்ஷ்மமான ப்ரம்மத்தை ஹ்ருதயகமலத்தில் உபாஸிக்க அந்தர்முகதை இல்லாத போனாலும், ஸ்தூலமான ப்ரம்மத்தை மணிபூரக சக்ரத்திலாவது உபாஸித்து, அதன்மூலம் அந்தர் முகதையை ஸம்பாதித்துக் கொண்டு, ஹ்ருதயகமலத்தில் தஹராகாசம் என்ற ஸூக்ஷ்மமான ப்ரம்மத்தை உபாஸிக்க அதிகாரிகளாக ஆகவேண்டும். இதைத்தவிர வேறு ஒன்றும் மானிட ஜன்மாவில் செய்யவேண்டிய கார்யம் இல்லை. உபநிஷத்துக்களே இவ்விதம்தான் பரப்ரம்மத்தினிடத்தில் கதறுகின்றன.

ஏ, வாஸுதேவ பரப்ரம்மமே, உன்னை தஹராகாசம் என்ற ப்ரம்மமாகஹ்ருதய கமலத்திலுபாஸிக்க முடியாத போனாலும், மணிபூரகத்திலாவது ஸ்தூலமாக உன் ஸ்வரூபத்தை உபாஸிக்கவேண்டியது அவச்யமாகும். இந்த ஸ்தூல உபாஸனத்திலும் அதிகாரமில்லாத கேவலம் மந்த மத்யமாதிகாரிகள் உன்னுடைய லீலாவதார கதாம்ருத பானத்தையாவது செய்து, உன்னுடைய நாமஸங்கீர்த்தனத்தால் ஜன்மஸாபல்யத்தை அடைய வேண்டும். எவ்விதத்திலும் உன்னு

டைய ஆராதனமில்லாமல் ப்ராணிகள் க்ருதார்த்தர்களாக ஆகமுடியாது. ஆகையால் ஸகலமான புண்ய புருஷர்களுக்கும் அதிகார தாரதம்யத்தை யநுஸரித்து ஸூக்ஷ்மம், ஸ்தூலம், லீலாவதாரம், என்ற க்ரமப்படி நீதான் உபாஸிக்கத்தகுந்த பரம்பொருளாகுவாய், உன்னிடத்தில்தான் எங்களுக்கும் பரமதாத்பர்யம் என்று வேதங்களே ப்ரம்மத்தை ஸ்தோத்ரம் செய்வதால், வேதங்களெல்லாம் ப்ரம்மபரந்தான் என்பது ஸித்தமாகிறது.

(தொடரும்.)

**Manians Best Kalnar Tooth Powder.**

**கல்நார் தந்த சுத்தி சூர்ணம்.**

இந்த சூர்ணமானது வைத்ய சாஸ்த்ரப்பிரகாரம் அநேக மூலிகைகளாலும், வேர்களாலும், நானாவித பட்டைகளாலும், இன்னும் பற்களுக்கு உறுதிகொடுக்கும்படியான சிலகல்நார் வகையறாவினாலும் செய்யப்பட்டுள்ளது இதை உபயோகித்து வந்தால், பல்வலி, பல்ஊரல், பல்லரணை, பல் அசைவு, பல்கூச்சம், முதலிய பற்களைச்சேர்ந்த வ்யாதிகளையும் கண்டிக்கும், பல்வலி, உடனே நிற்கும்.

**R. S. Manian,**
Ammangudi,
Jeeyapuram, S. I. Ry.

பாக்கட் 1-க்கு
0—1—6

உ

# ஸ்ரீ சங்கர விஜயம்

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

𑌬𑌾𑌹𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍇 𑌮𑌧𑍁𑌜𑌿𑌤𑌃 𑌶𑍍𑌰𑌿𑌤𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑍇 𑌯𑌾
𑌹𑌾𑌰𑌾𑌵𑌲𑍀𑌵 𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌮𑌯𑍀 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 ।
𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌾 𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌪𑌿 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌆𑌵𑌹𑌤𑍁 𑌮𑍇 𑌕𑌮𑌲𑌾𑌲𑌯𑌾𑌯𑌾𑌃 ॥

பாஹ்வந்தரே மதுஜித: ச்ரிதகௌஸ்துபே யா
ஹாராவளீவ ஹரிநீலமயீ விபாதி ।
காமப்ரதா பகவதோபி கடாக்ஷமாலா
கல்யாணம் ஆவஹது மே கமலாலயாயா: ॥

𑌮𑌧𑍁𑌜𑌿𑌤𑌃 (மதுஜித:) = மஹாவிஷ்ணுவினுடைய
𑌬𑌾𑌹𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍇 (பாஹ்வந்தரே) = மார்பில்
𑌶𑍍𑌰𑌿𑌤𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑍇 (ச்ருத கௌஸ்துபே) = விளங்குகின்ற கௌஸ்துபமணியில்
𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌮𑌯𑍀 (ஹரிநீலமயீ) = இந்த்ரநீலமணிமயமான
𑌹𑌾𑌰𑌾𑌵𑌲𑍀𑌵 (ஹாராவளீவ) = மாலையின் வரிசைபோல்
𑌕𑌮𑌲𑌾𑌲𑌯𑌾𑌯𑌾𑌃 (கமலாலயாயா:) = லக்ஷ்மீதேவியினுடைய
𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌪𑌿 (பகவதோபி) = விஷ்ணுவுக்குக்கூட

𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌾 (காமப்ரதா) = அபீஷ்டத்தைக் கொடுக்கிற
𑌯𑌾 (யா) = யாதொரு
𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾 (கடாக்ஷமாலா) = கடைக்கண் வரிசையின் பார்வையானது
𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 (விபாதி) = விளங்குகிறதோ
𑌸𑌾 (ஸா) = அந்த லக்ஷ்மீதேவியினுடைய கடைக்கண் பார்வையின் வரிசையானது
𑌮𑍇 (மே) = எனக்கு
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 (கல்யாணம்) = மங்களத்தை
𑌆𑌵𑌹𑌤𑍁 (ஆவஹது) = கொடுக்கட்டும்.

தாத்பர்யம்:—மஹாவிஷ்ணுவானவர் தன் மார்பில் கௌஸ்துப மணியை தரித்துவருகிறார். அதை அடிக்கடி மஹாலக்ஷ்மியானவள் தன் கடைக்கண்ணால் பார்த்து வரும்பொழுது, அந்த கௌஸ்துப மணியின்பேரில், இந்த்ர நீலமணியினால் ஒரு ஹாரம் போடப்பட்டிருக்கிறதோ என்று தோன்றுகிறது. மஹாலக்ஷ்மியானவள் உத்தம ஸ்த்ரீயான காரணத்தினால், அவளுடைய கடைக்கண்கள் அதிக கருமைநிறமுள்ளதாக இருக்கின்றன. அதனால் அதனுடைய பார்வையை இந்த்ர நீலமணிபோல் வர்ணித்தது உசிதமாகும். அத்துடன் லக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷவீக்ஷண்யம்தான் விஷ்ணுவுக்குக் கூட ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியதாக இருந்து வருகிறது. அவ்விதம் மஹிமையுள்ள லக்ஷ்மீகடாக்ஷமானது, எனக்கு அடிக்கடி கல்யாணத்தையே கொடுக்கவேண்டும்.

𑌕𑌾𑌲𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌾𑌲𑌿 𑌲𑌸𑌿𑌤𑍋𑌰𑌸𑌿 𑌕𑍈𑌟𑌭𑌾𑌰𑍇𑌃
𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑍇 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌯𑌾 𑌤𑌡𑌿𑌦𑌙𑍍𑌗𑌨𑍇𑌵 ।



𑌮𑌾𑌤𑍁𑌃 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌤𑌾𑌂 𑌮𑌹𑌨𑍀𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃
𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑍇 𑌦𑌿𑌶𑌤𑍁 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌯𑌾𑌃 ॥

(காளம்புதாளி லஸிதோரஸி கைடபாரே:
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கநேவ।
மாது: ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்தி:
பத்ராணி மே திசது பார்க்கவ நந்தநாயா:) ॥

𑌕𑍈𑌟𑌭𑌾𑌰𑍇𑌃 (கைடபாரே:) = விஷ்ணுவினுடைய
𑌕𑌾𑌲𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌾𑌲𑌿 𑌲𑌸𑌿𑌤𑍋𑌰𑌸𑌿 (காளாம்புதாலி லஸிதோரஸி) = நீருண்ட மேகத்தினுடைய ஸங்காதம்போல் அழகாயுள்ள மார்பில்
𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑍇 (தாராதரே) = மேகத்தில்
𑌤𑌡𑌿𑌦𑌙𑍍𑌗𑌨𑍇𑌵 (தடிதங்கநேவ) = மின்னலாகிற ஸ்த்ரீஜாதிபோல்
𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌯𑌾𑌃 (பார்க்கவ நந்தநாயா:) = ப்ருகுவம்சத்தி லவதரித்தவளாயும்
𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌤𑌾𑌂 𑌮𑌾𑌤𑍁𑌃 (ஸமஸ்த ஜகதாம் மாது:) = ஸகல லோகத்திற்கும் மாதாவாயுமுள்ள மஹாலக்ஷ்மியினுடைய
𑌯𑌾 (யா) = யாதொரு
𑌮𑌹𑌨𑍀𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 (மஹநீய மூர்த்தி:) = பூஜிக்கத்தகுந்த ஆக்ருதியானது
𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 (ஸ்புரதி) = ப்ரகாசிக்கிறதோ
𑌸𑌾 (ஸா) = அந்த மூர்த்தியானது
𑌮𑍇 (மே) = எனக்கு
𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 (பத்ராணி) = மங்களங்களை
𑌦𑌿𑌶𑌤𑍁 (திசது) = உண்டுபண்ணட்டும்.

தாத்பர்யம்:—நீருண்ட மேகத்தினுடைய மத்தியில் அழகான மின்னல் கொடிபோல் மஹாலக்ஷ்மீ தேவியினுடைய அழகான ஆக்ருதியானது, மஹாவிஷ்ணுவினுடைய மார்பில், மஹாலக்ஷ்மீ மஹாவிஷ்ணுவை ஆலிங்கனம் செய்துகொள்ளும் காலத்தில், விளங்கிவருகிறது. அவ்விதமான ஆக்ருதியுடைய மஹாலக்ஷ்மி தேவியோ, ப்ருகு மஹர்ஷியினுடைய வம்சத்தில் அவதரித்தவள், ஸகல லோகத்திற்கும் தாயாராகவும் விளங்கிவருகிறவள். அவ்விதமாயுள்ள மஹாலக்ஷ்மீ தேவியின் அழகான ஆக்ருதியை யாரால் வர்ணிக்க முடியும். அவ்விதமான அந்த மூர்த்தியானது எனக்கு அடிக்கடி மங்களங்களைக் கொடுத்துவரவேண்டும்.

𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌤𑌃 𑌖𑌲𑍁 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍
𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌭𑌾𑌜𑌿 𑌮𑌧𑍁𑌮𑌾𑌥𑌿𑌨𑌿 𑌮𑌨𑍍𑌮𑌥𑍇𑌨 ।
𑌮𑌯𑍍𑌯𑌾𑌪𑌤𑍇𑌤𑍍𑌤𑌦𑌿𑌹 𑌮𑌨𑍍𑌥𑌰𑌂 𑌈𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌂
𑌮𑌨𑍍𑌦𑌾𑌲𑌸𑌂 𑌚 𑌮𑌕𑌰𑌾𑌲𑌯𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌯𑌾𑌃 ॥

(ப்ராப்தம் பதம் கலுயத் ப்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதினி மந்மதேந ।
மய்யாபதேத்ததிஹ மந்த்ரம் ஈக்ஷணார்த்தம்
மந்தாலஸஞ்ச மகராலயகந்யகாயா: ॥

| | | |
|---|---|---|
| 𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌭𑌾𑌜𑌿 (மாங்கல்ய பாஜி) | = | ஸர்வமங்களத்திற்கும் இருப்பிடமாயும் |
| 𑌮𑌧𑍁𑌮𑌾𑌥𑌿𑌨𑌿 (மதுமாதினி) | = | மது என்ற அஸுரனைக்கொன்றவராயுமுள்ள மஹாவிஷ்ணுவினிடத்தில் |
| 𑌮𑌨𑍍𑌮𑌥𑍇𑌨 (மன்மதேந) | = | மன்மதனாலே |
| 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 (யத்ப்ர பாவாத்) | | எந்த லக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷ ப்ராபவத்தால் |



| | | |
|---|---|---|
| 𑌪𑍍𑌰𑌥𑌮𑌤𑌃 (ப்ரதமத:) | = | முதலில் |
| 𑌪𑌦𑌂 (பதம்) | = | தனக்கு வாஸஸ்தானயானது |
| 𑌖𑌲𑍁 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 (கலு ப்ராப்தம்) | = | நிச்சயமாக அடையப்பட்டதோ |
| 𑌮𑌕𑌰𑌾𑌲𑌯 𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌯𑌾𑌃 (மகராலய கன்யகாயா:) | = | லக்ஷ்மீதேவியினுடைய |
| 𑌮𑌨𑍍𑌦𑌾𑌲𑌸𑌂 (மந்தாலஸம்) | = | அழகாக சலித்துக்கொண்டிருக்கிறதாயும் |
| 𑌮𑌨𑍍𑌥𑌰𑌂 (மந்தரம்) | = | வ்யாமோஹத்தை உண்டுபண்ணுகிறதாயுமிருக்கிற |
| 𑌤𑌤𑍍 (தத்) | = | அந்த |
| 𑌈𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌂 (ஈக்ஷணார்த்தம்) | = | அரைக்கண் பார்வையானது |
| 𑌇𑌹 (இஹ) | = | இப்போது |
| 𑌮𑌯𑌿𑌚 (மயிச) | = | என்னிடத்திலும் |
| 𑌆𑌪𑌤𑍇𑌤𑍍 (ஆபதேத்) | = | வீசட்டும். |

தாத்பர்யம்:—மன்மதனானவன் லோகத்தை ஜயிப்பதில் ப்ரஸித்தி பெற்றவன், அதிலும் முதன்மையாக மஹாவிஷ்ணுவை ஜயித்தான். மன்மதன் விஷ்ணுவை ஜயிப்பதில், விஷ்ணுவினிடத்தில் ஏற்பட்ட மஹாலக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷம்தான் அவனுக்கு உதவியாக இருந்தது. அந்த கடாக்ஷத்தின் சலனமோ, ஸௌந்தர்யமோ, இவ்விதம்தான் என்று வர்ணிக்கமுடியாததான மஹிமை தங்கியது. அவ்விதமான லக்ஷ்மீ கடாக்ஷமானது, என்னிடத்திலும் வீசி, என்னை ஸௌபாக்யத்தோடு கூடினவனாக செய்யவேண்டும்.

(தொடரும்)

# ஸ்ரீதேவீ பாகவதம்

## பராம்பிகை ஸ்துதி.

𑌦𑍇𑌵𑌾 𑌊𑌚𑍁𑌃

𑌨𑌮𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑍈 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑍈
𑌶𑌿𑌵𑌾𑌯𑍈 𑌸𑌤𑌤𑌂 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈 𑌭𑌦𑍍𑌰𑌾𑌯𑍈
𑌨𑌿𑌯𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌃 𑌸𑍍𑌮 𑌤𑌾𑌮𑍍 ॥

𑌤𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌤𑌪𑌸𑌾 𑌜𑍍𑌵𑌲𑌨𑍍𑌤𑍀𑌂
𑌵𑍈𑌰𑍋𑌚𑌨𑍀𑌂 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇𑌷𑍁 𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌮𑍍 ।
𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌶𑌰𑌣 𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇
𑌸𑍁𑌤𑌰𑌸𑌿 𑌤𑌰𑌸𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌦𑍇𑌵𑍀𑌂 𑌵𑌾𑌚𑌮𑌜𑌨𑌯𑌨𑍍𑌤 𑌦𑍇𑌵𑌾𑌃
𑌤𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 ।
𑌸𑌾 𑌨𑍋 𑌮𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌷𑌮𑍂𑌰𑍍𑌜𑌂 𑌦𑍁𑌹𑌾𑌨𑌾
𑌧𑍇𑌨𑍁𑌰𑍍𑌵𑌾𑌗𑌸𑍍𑌮𑌾𑌨𑍁𑌪𑌸𑍁𑌷𑍍𑌟𑍁𑌤𑍈𑌤𑍁 ॥

𑌕𑌾𑌲𑌰𑌾𑌤𑍍𑌰𑍀𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌂
𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 ।
𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌦𑌿𑌤𑌿𑌂 𑌦𑌕𑍍𑌷𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌮𑍍
𑌨𑌮𑌾𑌮𑌃 𑌪𑌾𑌵𑌨𑌾𑌂 𑌶𑌿𑌵𑌾𑌮𑍍 ॥

---

17950

(எல்லோரும் எப்போதும் க்ஷேமத்தின்பொருட்டு

Regd. No. M2970 Regd. No. M2970

# “ஸன்மார்க்க ப்ரதர்சினி”

## மதுரை.

ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் வெளிவரும்.

| | மதுரைக்கு | வெளியூர்களுக்கு |
|---|---|---|
| வருஷ சந்தா ரூ. | 1—0—0 | 1—6—0 |
| 6 மாத சந்தா ரூ. | 0–12—0 | 0–14—0 |
| தனிப்பிரதி ரூ. | 0—2—0 | |

1. சந்தாத்துகையை முன் பணமாகவே மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.
2. விலாஸ மாறுதல்களுக்கு சந்தா எண்ணைக் குறித்து புதிய விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. கடிதப் போக்கு வரத்துக்களுக்கு, பதில் வேண்டுவோர், தபால் செலவு அனுப்ப வேண்டும்.

## அறிவிப்பு.

‘ஸன்மார்க்கப்ரதர்சினீ’ வாசகர்களுக்கு வணக்கமாகத் தெறிவித்துக் கொள்வதாவது:—

நாகர டைப்ஸ் மதராஸிலிருந்து வர தாமதித்துவிட்டபடியால் நாளது மாசத்திலும் கிரந்த அக்ஷரத்திலேயே போடும்படி நேர்ந்தது.

அடுத்த ஏப்ரல்மீ 1-ம் தேதி வெளிவரும் ஸஞ்சிகையில் நாகர டைப்பிலேயே முன் நடந்தது போல ச்லோகங்கள் அச்சிடப் படும்.

மானேஜர்,

ஸன்மார்க்க ப்ரதர்சினீ,

மதுரை.

ஹரிஸமய திவாகரம் பிரஸ், மதுரை—35.